# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.55/2023

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 13 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நந்தன் | மதம் | : இந்து |
| த/பெ | : ஏழுமலை | ஜாதி | : -- |
| வயது | :58 | கிராமம் | : அருங்குளம் |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**13.10.2025**

**வா.சா. 3 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

2. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 3ல் பி அட்டவணை சொத்து புல எண்.288/2 வாதியின் பிதுர்ராஜிய சொத்து என குறிப்பிடுவதற்கு பதிலாக தட்டச்சு பிழையாக புல எண்.288/3 என குறிப்பிடப்பட்டுவிட்டது. உண்மையில் பி அட்டவணை சொத்து புல எண்.288/2ல் இரண்டரை செண்ட் நிலம் வாதியின் பிதுர்ராஜிய சொத்தாகும். வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் தரப்பில்</u>**

1. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் நிலத்திற்கு பக்கத்து நிலத்தில் அவர் பயிர் செய்கிறார் என்பது மட்டும் தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள A அட்டவணை சொத்து என சொல்லியிருப்பதில் அதன் புல எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. முனிரத்தினத்திற்கு கிழக்கேயும் எனக்கு மேற்கேயும் நிலம் இருக்கிறது. எனது பிரமாண வாக்குமூலத்தில் B அட்டவணை சொத்து என சொல்லியிருப்பதில் அதன் புல எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. சொத்தை சஞ்சீவி

மந்தடியிடம் இருந்து வாங்கியதாக சொல்லியிருப்பதில் அது எந்த வருடம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. நான் பயிர் செய்த காலத்தில் பக்கத்து நிலத்தில் சஞ்சீவி மந்தடி பயிர் செய்தாரா என்றால் பயிர் செய்தார். முனிரத்தினத்திற்கு சஞ்சீவி மந்தடி கிரையம் கொடுத்ததாக சொல்வதில் ஆவண எண் சொல்லியுள்ளேனா என்றால் தெரியாது. B அட்டவணை சொத்து பிதுர்ராஜியம் என சொல்லியிருப்பதில் யார் மூலம் எப்படி வந்தது என்றால் தெரியாது. உண்மையிலேயே A, B அட்டவணை சொத்துக்களை வாதி முனிரத்தினம் பயிர் வைத்திருந்தால் எனக்கு அந்த விவரம் தெரிந்து இருக்கும் என்றாலும் வாதி பயிரே வைக்காததால் எனக்கு விவரம் தெரியவில்லை என்றாலும் சரியல்ல.

3. வாதி சொத்திற்கு அருகில் நான் பயிர் செய்ததாக சொல்லும் சொத்தை நான் தற்போது வைத்துள்ளேனா விற்றுவிட்டேனா என்றால் விற்றுவிட்டேன். அந்த சொத்தை எப்போது விற்றேன் என விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் விற்ற சொத்திற்கு அருகில்தான் கஜேந்திரன் சொத்து உள்ளது என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 5ல் **"வாதி சொத்தின் மேலாண்ட பக்கத்தில் பிரதிவாதிகளின் இடம் உள்ளது"** என சொல்லியுள்ளேன் என்றால் நான் சொல்லவில்லை. சொத்து தொடர்பாக வாதி பிரதிவாதிகளுக்கு இடையே தகராறு நடந்து காவல் நிலையத்தில் விசாரணை நடந்தது தெரியுமா என்றால் சண்டை நடந்தது என சொல்லிக்கொண்டாகள். காவல் துறையில் விசாரணை நடந்ததா என தெரியாது. சண்டை நடந்த விவரம் தெரியும் என பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. சண்டை நடந்தது என சொல்லிக்கொண்டாகள்.

4. வாதி அழைத்துதான் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு குறித்த விவரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் வாதி சொல்லிக்கொடுத்து நான் சாட்சி சொல்கிறேன் என்றால் வாதி பயிர்

செய்தார். அதை சொல்ல வந்துள்ளேன். வாதி கிரையம் வாங்கும் முன்பே எனது சொத்தை விற்றுவிட்டு நான் முனிரத்தினம் கேட்டுகொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் உண்மையைதான் சொல்கிறேன். நான் கூறும் சாட்சியம் வாதிக் கேட்டுகொண்டதற்கிணங்க இல்லாத ஒன்றை வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் வாதி பயிர் செய்ததைதான் சொல்கிறேன். உண்மையில் நான் பயிர் செய்திருந்தால் வாதியின் புல எண், பட்டா எண், விஸ்தீரணம் எனக்கு தெரியும் என்றல் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)